புதுசேரி அரசு
போக்குவரத்துத் துறை

எண்: 13/போ.து/டி.பி-4/2016 தேதி :26.05.2016

செய்திக் குறிப்பு

**போக்குவரத்து வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்துதல் வேண்டும்**

இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989, விதி எண் 118ல், 15.04.2015 தேதியிட்ட அறிவிக்கை எண் G.S.R.290(E) மூலம் செய்யப்பட்ட திருத்தத்தின்படி, குறிப்பிட்ட போக்குவரத்து வாகனங்களுக்கு அதிகபட்ச வேகம், ஒரு மணிக்கு 80 கி.மீ. க்கு மிகாமல், வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட வேண்டும். மேலும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் தங்கள் தேவைககேற்ப அதிகபட்ச வேகத்தினை ஒரு மணிக்கு 80 கி.மீ.க்கு மிகாமல் வேக நிர்ணயம் செய்து அமல்படுத்தலாம் என்பதறகேற்ப புதுச்சேரி அரசானது கடந்த 07.10.2015 அன்று அரசாணை எண்.20/2015-ன்படி குறிப்பிட்ட போக்குவரத்து வாகனங்களுக்கான வேகக் கட்டுப்பாட்டினை நிர்ணயம் செய்துள்ளது.

மேற்படி அரசாணைகளின்படி, புதுச்சேரி யூனியன் பிரதேச எல்லைக்குள் வாகனங்கள் வாரியாக வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தும் விபரம் வருமாறு:

| **வ.எண்** | **வாகன வகை** | **அதிகபட்ச வேகம்/கி.மீ./ ஒரு மணிநேரத்திற்கு** |
|---|---|---|
| 1. | தொலைதூரம் செல்லும் பேருந்துகள் | 80 கி.மீ. |
| 2. | பேருந்துகள் (கடலூர் – புதுச்சேரி & விழுப்புரம் - புதுச்சேரி வழித்தடத்தில் மட்டும் | 70 கி.மீ. |
| 3. | பேருந்துகள் - புதுவை மாநில எல்லைக்குள் இயக்கப்படுபவை மட்டும் | 60 கி.மீ. |
| 4. | பேருந்துகள் - புதுவை நகர எல்லைக்குள் இயக்கப்படுபவை (டவுன் பஸ்) | 45 கி.மீ. |
| 5. | மாணவ - மாணவியரை ஏற்றிச்செல்லும் பேருந்துகள் மற்றும் வேன்கள் | 45 கி.மீ. |
| 6. | 8+1 இருக்கைக்கு மேல் உள்ள ஒப்பந்த ஊர்திகள் | 80 கி.மீ. |

.... 2/-

| | | |
|---|---|---|
| 7. | டூரிஸ்ட் பர்மிட் பெற்றுள்ள சுற்றுலா வாகனங்கள் (TVP) | 80 கி.மீ. |
| 8. | 3 சக்கர வாகனங்கள் மற்றும் டம்பர்கள், டேங்கர்கள்தவிர்த்து அனைத்து சரக்கு வாகனங்கள் | 80 கி.மீ. |
| 9. | டேங்கர், டம்பர்கள் மற்றும் அபாயகரமான பொருட்களை ஏற்றிசசெல்லும் வாகனங்கள் | 60 கி.மீ. |

மத்திய அரசின் 22.04.2016 தேதியிட்ட அறிவிக்கை எண். S.O.1472(E)-ன்படி மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கும் 2016 ஜூலை மாதம் 31-ஆம் தேதிக்கு முன் அதன் உரிமையாளர்களால் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட வேண்டும். 2016 ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி முதல் மேற்கண்ட போக்குவரத்து வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்துதல் கட்டாயமாக்கப்படுகிறது. அதன் பின்னர் வாகனத் தணிக்கையின் போது மேற்கண்டவாறு வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்படாத வாகன உரிமையாளர் மீது மோட்டார் வாகனச் சட்ட, விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 01.08.2016க்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்படவில்லையெனில், மேற்குறிப்பிட்ட எந்தவொரு போக்குவரத்து வாகனத்திற்கும் இத்துறையால் வாகன தகுதிச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

மேற்படி அரசாணை மற்றும் விபரங்கள் குறித்து முன்னரே நாளிதழ்களில் செய்தி வெளியாகியிருப்பினும், வாகன உரிமையாளர்களின் கவனத்திற்கு மீண்டும் தெரிவித்து தங்களது வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தி ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்
புதுச்சேரி

**No.13/TD/TP4/ 2016**
**GOVERNMENT OF PUDUCHERRY**
**TRANSPORT DEPARTMENT**

Puducherry, dt. 26.05.2016

## PRESS NOTE

The Ministry of Road Transport and Highways, Government of India has amended the Rule 118 of Central Motor Vehicle Rules, 1989 vide Notification in G.S.R.290(E), dated 15.04.2015 and has fixed the maximum speed limit for certain category of vehicles as 80 Kms. per hour. As the notification also empowers the State Governments / Union Territories to fix speed limit not exceeding 80 Kms. / hour, the Government of Puducherry has fixed the speed limit for various categories of transport vehicles in Puducherry vide Notification in G.O.Ms. No.20/Sectt/2015, dated 07.10.2015 as detailed below:

### THE TABLE

| Sl. No. | Type of Vehicle | Max. Speed Limit in Kms. per hour |
|---|---|---|
| (i) | Long Distance Stage Carriages | 80 Kms. |
| (ii) | Stage Carriages Plying on Inter State Routes Cuddalore-Puducherry & Villupuram-Puducherry | 70 Kms. |
| (iii) | Stage Carriages plying on Intra State Routes | 60 Kms. |
| (iv) | Stage carriage buses plying on Urban Routes (Town Buses) | 45 Kms. |
| (v) | Buses/Vans used for transporting students | 45 Kms. |
| (vi) | Contract Carriages with seating capacity exceeding 8+1 | 80 Kms. |
| (vii) | Tourist vehicles covered with permits issued under Sec.88(9) of Motor Vehicles Act, 1988 (TVP) | 80 Kms. |
| (viii) | Goods vehicles except 3 wheeler goods vehicles, Dumpers, Tankers and those carrying hazardous goods | 80 Kms. |
| (ix) | Dumpers, Tankers and those carrying hazardous goods | 60 Kms. |

As per the Notification No. S.O.1472(E), dated 22.04.2016 the Central Government has given time limit upto 31st July 2016 to fix the speed Governor to the transport vehicles, as prescribed by the Government of India/State Governments.

Accordingly, all the category of transport vehicle noted above has to fix the Speed Governor on or before 31.07.2015. As fixing Speed Governors have become mandatory from 01.08.2016 onwards, the above category of vehicles found without Speed Governors during enforcement will be penalized under the relevant Acts and Rules. Further no Fitness Certificates shall be issued by the Transport Department, Puducherry to the transport vehicles that failed to fix the Speed Governor device, beyond 31st July 2016.

The details of the above notifications have already appeared in newspapers; yet considering the need to fix Speed Governors the same is once again brought to the notice of all the operators of transport vehicles, so as to ensure safe transportation of passengers / student and goods.

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

**(S.D. SUNDARESAN)**
**TRANSPORT COMMISSIONER**